# கல்வியே உலகை வெல்லும் கருவி

தமிழகத்தின் தலைநகரம் சிங்கார சென்னை மாநகரில் 40 ஆண்டுகளுக்கு மேலாக வீட்டுமனை விற்பனை துறையில் தனி முத்திரை பதித்து சிறந்து விளங்குவது லியோ ஹவுசிங் (பி) லிட். என்ற ரியல் எஸ்டேட்ஸ் நிறுவனம் ஆகும். இதன் நிர்வாக இயக்குனரான அரிமா, லியோ முத்து 77-க்கு மேற்பட்ட அரசு அங்கீகாரம் பெற்ற புதிய நகர்களை சென்னை, மதுரை, ஓசூர் மற்றும் பெங்களூர் ஆகிய நகரங்களில் உருவாக்கி பல்லாயிரக்கணக்கான வாடிக்கையாளர்களுக்கு குறைந்த விலையில் குடியிருப்பு மனைகளை வழங்கி உள்ளார்.



லியோ முத்து

இப்படி லியோ முத்து மிக மிக குறைந்த விலையில் அதாவது ரூ.900/-க்கு விற்ற வீட்டுமனைகள் இன்று ரூ.50 லட்சத்துக்கு மேல் விலை உயர்ந்து பன்மடங்கு விலை கூடியுள்ளது. இதனால் இவருக்கு பொதுமக்களிடையே மிகுந்த நற்பெயரும், பாராட்டும் கிடைத்து வருகிறது. இந்நிலையில் வீட்டுமனை விற்பனை துறையில் இருந்த லியோ முத்து, தன்னை பன்னாட்டு அரிமா சங்கத்தில் 1989 முதல் இணைத்துக் கொண்டு பல்வேறு சமூக சேவைகள் மூலம் ஊனமுற்றவர்களுக்கும், ஆதரவற்ற முதியோர்களுக்கும், அனாதை சிறார்களுக்கும் பல உதவிகளை செய்து வந்தார். அதன் மூலம் இலவச கண்புரை அறுவை சிகிச்சை, மூக்கு கண்ணாடி, தையல் இயந்திரங்கள் வழங்குதல், இலவச திருமணங்களை நடத்தி வைத்தல், அன்னதானம் செய்தல் போன்ற பல்வேறு நலத்திட்டங்களையும், தொண்டுகளையும் ஆற்றி வந்தார்.

இவை அனைத்தும் தற்காலிக நிவாரணம் மட்டுமே. இந்த நேரத்தில் அவரிடம் பொதுமக்களுக்கு ஏதேனும் நிரந்தரமான சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதன்படி முதன்முதலாக சென்னை மடிப்பாக்கத்தில் 22 ஆண்டுகளுக்கு முன்பே 1989-ல் முதன் முதலில் ஒரு பள்ளியை 135 மாணவ-மாணவிகளுடன் தொடங்கினார். இன்று அந்த பள்ளி சாய் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளியாக உயர்ந்து அதில் 2,500-க்கு மேற்பட்ட மாணவ-மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளி கடந்த 17 ஆண்டுகளாக தொடர்ச்சியாக எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் பிளஸ்-2 பொதுத் தேர்வுகளில் அனைத்து மாணவர்களும் 100/100 சதவீதம் தேர்ச்சி பெற்று வருவதும், அவர்கள் அனைவரும் முதல் வகுப்புக்கு மேல் உயர் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. கல்வியின் அவசியத்தை நன்கு உணர்ந்த லியோ முத்து, அரசு துறையால் மட்டுமே கல்வித் தேவையை முழுமையாக பூர்த்தி செய்ய முடியாது என்பதை உணர்ந்ததன் காரணமாக அவர் இன்று பள்ளி கல்வி முதல் உயர் கல்வி வரை கே.ஜி. வகுப்பு முதல் பி.ஜி. வரையிலான பொறியியல், பாலிடெக்னிக் கல்லூரிகள், சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி மருத்துவ கல்லூரிகள், நிர்வாக மேலாண்மை படிப்பு, கடல்சார் படிப்பு உட்பட அனைத்து தொழில் கல்வி நிறுவனங்களையும் "சீரடி சாய்பாபா" பெயரிலும் மற்றும் "சாய்ராம்" பெயரிலும் மிகுந்த சிரமத்திற்கிடையே உருவாக்கி உள்ளார். இவை அனைத்தும் தனியார் சுயநிதி அடிப்படையில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியான "சென்ட்ரல் பாங்க் ஆப் இந்தியா" உதவியுடன் மிக பிரமாண்டமாக நிர்மாணித்துள்ளதாக தெரிவித்த லியோ முத்து "கல்வியே உலகை வெல்லும் கருவி" என்றும் கூறினார்.

அந்த வகையில் இவர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், அண்டை மாநிலங்களான புதுச்சேரி யூனியன் பிரதேசம், கர்நாடக மாநிலம் பெங்களூர் ஆகிய இடங்களில் தன்னுடைய கல்விச் சேவையை விரிவுபடுத்தி உள்ளார். இன்று இவரது பல்வேறு கல்வி நிறுவனங்களில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார் அரிமா லியோ முத்து. தொலைநோக்கு பார்வையுடன் இவர் 1994-ல் ஸ்ரீ சாய்ராம் ஆப்செட் பிரிண்டர்ஸ், சூப்பர் டையர் லிட்., சூப்பர் ஸீ புட் புராடக்ட்ஸ் (பி) லிட்., போன்ற தொழிற்சாலைகளையும் உருவாக்கினார். இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் காணும் 2020-ம் ஆண்டில் நம் இந்திய திருநாடு வல்லரசு நாடாக உருவாக வேண்டும் என்ற கனவை நனவாக்குவதில் நாம் ஒவ்வொருவரும் நம் பங்களிப்பை ஆற்றுவோம் என்று சாய் ராம் கல்வி குழுமங்களின் தலைவர் அரிமா, லியோ முத்து கூறினார்.